செ.வெ.எண். 80 நாள்: 30.08.2019

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி செப்டம்பர் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைபெற உள்ளது —— மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் வாக்காளர் சரிபார்ப்பு திட்டம் தொடர்பான ஆலோசனை கூட்டம் 30.08.2019 இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருவாய் கோட்டாட்சியர்/வட்டாட்சியர்கள்/நகராட்சி ஆணையர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்பொழுது :**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர் சரிபார்ப்பு திட்டம் 01.09.2019 முதல் 30.09.2019 வரை நடைபெற உள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வருகின்ற 15.10.2019 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. வாக்காளர்கள் அட்டையில் உள்ள தவறுகளை வாக்காளர்களே நேரடியாக திருத்தம் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வருகின்ற செப்டம்பர் 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியிலும் வீடு வீடாக வாக்காளர் பட்டியல் சரிசெய்யும் பணியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மேற்கொள்ள உள்ளார்கள். வாக்காளர்கள் தங்களுடைய புகைபடம்/பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை செய்துகொள்ளலாம். வாக்காளர்கள் தங்களிடம் உள்ள அடையாள அட்டையில் பதிவாகி இருக்கும் பிறந்த தேதி, பெயர், உறவு முறை, புகைபடம், பாலினம் உள்ளிட்டவை சரியாக இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்ளலாம். இதில் பிழை ஏதும் இருந்தால் வாக்காளர்கள் நேரடியாக NVSP என்ற இணையதள வசதி மற்றும் இ-சேவை மையத்தின் மூலமாகவும் திருத்தம் செய்து கொள்ளலாம். வருகின்ற 01.09.2019 முதல் வருவாய் கோட்டங்களான கிருஷ்ணகிரி/ஒசூர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்/வட்டாட்சியர் அலுவலகங்களில் வாக்காளர்கள் பட்டியல் சரிபார்க்க இணையதள வசதியுடன் கூடிய வாக்காளர் சேவை மையம் 30.09.2019 வரை செயல்படும். வாக்காளர்கள் இந்த அறிய வாய்ப்பை வாக்காளர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

டாக்டர்.சு.பிரபாகர், இ.ஆ.ப.,
மாவட்ட தேர்தல் அலுவலர்
மற்றும் மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

---

மாவட்ட தேர்தல் அலுவலர்
மற்றும் மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.